குடும்பக்கட்டுப்பாடு செய்ய வேண்டாம் -சந்திரபாபு நாயுடு

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 MARCH
மலர்: 8 இதழ்: 6 மார்ச் 2015 விலை: ரூ. 5



## கருணைக்கொலை எனும் "விருது"!



## முதியோர் இல்லம் தவிர்!



## குழந்தைகள் வரமா? சாபமா?

# பெற்றோரைப் பேணாதோருக்கு நாசமே!

## முதியோர் இல்லம் தவிர்!

● பெற்றோரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால் அவர்களை உ.:ப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! (அல்குர்ஆன் 17:23)

## பெற்றோருக்காக பிரார்த்தனை

● இன்னும் இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!" என்று கூறிப் பிரார்த்திப்பீராக! (அல்குர்ஆன் 17:24)

● நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வலியுறுத்தியுள்ளோம் அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள் இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது." (அல்குர்ஆன் 31:14)

## தண்டனை தள்ளிவைக்கப்படுவதில்லை!

● பெற்றோரைக் கொடுமைபடுத்தியதற்காகத் தரப்படும் தண்டனை மரணத்திற்குமுன் இவ்வுலகிலேயே துரிதமாகத் தரப்பட்டுவிடும் என நபி அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூபக்ரா (ரலி) நூல்: பைஹகீ

## பெற்றோரின் திருப்தி

● பெற்றோரில் ஒருவர் கோபமடைந்தாலும் அவர்கள் திருப்தி அடையும்வரை இறைவன் திருப்தியடைய மாட்டான் என்று நபி கூறியதும் அந்தப் பெற்றோர் அநீதம் செய்தாலுமா? என்று கேட்கப்பட்டதற்கு, ஆம்! அவர்கள் அநீதம் செய்தாலும்தான் என்று நபி பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), முப்ரத் அல் புகாரி

## பெற்றோரை பேணுதலும் அறப்போரே (ஜிஹாத்)

● ஜாஹிமா(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து இறைத்தூதர் அவர்களே! நான் போரில் கலந்து கொள்ள நாடுகிறேன் என்று கூறினார். உனக்கு தாய் உண்டா? என்று கேட்டதும் ஆம் என்றார். அவளை (கவனிப்பதை) தேர்ந்தெடுத்துக்கொள். அவளின் இரு கால்களின் அடியில் தான் சொர்க்கம் உள்ளது என்று நபி அவர்கள் கூறினார்கள். (முஆவியா இப்னு ஜாஹிமா(ரழி) அஹ்மத், நஸயீ, ஹாகிம், தப்ரானீ)

இறைவனின் தூதர் நமக்கு கூறிச்சென்ற அறிவுரைகளை மனதில் நிறுத்தி இறைவனின் பொருத்தத்தை பெறுவோமாக!

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 MARCH**

**மலர்: 8 இதழ்: 6** **மார்ச் 2015** **விலை: ரூ. 5**

## பொருளடக்கம்

| | |
|---|---|
| காலம் கடந்த ஞானம் | 2 |
| தம் கையாலேயே அழியும் இனங்கள் | 4 |
| இறைநெறியைப் புறக்கணித்ததால் இன அழிவா? | 6 |
| குழந்தைக் கொலை- எவ்வளவு பெரிய பாவம்? | 8 |
| பாவமன்னிப்பு- இறைநெருக்கத்திற்கு ஓர் வழி | 10 |
| பிரார்த்தனை பயனுள்ளதாக... | 11 |
| இறைவனிடம் நேரடியாகக் கேளுங்கள் | 12 |
| பிரார்த்தனையும் ஒரு வணக்கமே | 13 |
| இஸ்லாமிய அறிவியலின் வரலாறு | 14 |
| திருக்குர்ஆன் தூவிய அறிவியலின் விதைகள் | 17 |
| உலக சரித்திரத்தில் முதல் கொலை | 19 |
| என் கேள்விக்கென்ன பதில்? | 20 |
| கருணைக்கொலை எனும் “விருது”! | 23 |

published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357



# காலம் கடந்த ஞானோதயம்!

இது செய்தி:

குடும்பக்கட்டுப்பாடு செய்ய வேண்டாம் அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ளுங்கள். – சந்திரபாபு நாயுடு பேச்சு

இது எச்சரிக்கை:

நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்) அளிக்கின்றோம் – அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும் (அல்–குர்ஆன் 17:31)

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

சமீபத்தில் பத்திரிகைகளில் வந்த மேற்படி செய்தியை யாரும் மறந்து இருக்கமாட்டீர்கள்.

என்.டி.ராமராவ் நினைவு நாளையொட்டி 18 கிலோ மீட்டர் தூர பாத யாத்திரையை சந்திரபாபு நாயுடு மேற்கொண்டார். மேற்கு கோதாவரி மாவட்டம் வேலிவேணு கிராமத்தில் யாத்திரையை தொடங்கிய அவர் செட்டிவேட்டை, தல்லாபலம், சிங்கவாரா உள்ளிட்ட கிராமங்களுக்கு சென்று பிரமணாகூடம் கிராமத்தில் முடித்தார்.

இந்த கிராமங்களில் சந்திரபாபு நாயுடு பேசியபோது, ‘ஆந்திர மக்கள் அதிக குழந்தைகளை பெறவேண்டாம். குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று முன்பு நான் கூறினேன். ஏன்? நானே ஒரு மகனுடன் நிறுத்திக்கொண்டேன். இப்போது ஜனத்தொகையை பெருக்குங்கள் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்று படித்தவர்கள் பலர் திருமணம் செய்து கொள்வதில்லை. திருமணம் செய்து கொண்டால் குழந்தைகள் பெற்றுக்கொள்ளுவது இல்லை.

நாட்டில் ஆண்டுக்கு 9 லட்சம் சிசு மரணம் நிகழ்கிறது. இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஜப்பானை எடுத்துக்கொண்டால் அங்கு முதியவர்கள்தான் அதிகம் உள்ளனர். இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து விட்டது. இங்கும் அந்த நிலைதான் ஏற்படுகிறது. எனவே நீங்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டாம். அதனால் பலன் இல்லை. அதிக குழந்தைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.’ என்று தெரிவித்தார்.

(தினமலர், மாலைமலர், தினபூமி......)

---

இது ஒரு மாநிலத்துக்கு முதல்வராக பலகாலம் இருந்து மீண்டும் அதே பொறுப்பில் தொடரும் ஒரு பழுத்த அரசியல்வாதியின் அனுபவ வாக்குமூலம். இதே எண்ணம் வேறு சில அமைப்புகளின் தலைவர்களும் வெளிப்படுத்துவதை செய்திகள் மூலம் கண்டு வருகிறோம்.

இந்தியாவில் முதலில் பா.ஜ.க. எம்.பி.யான சாக்ஷி மகாராஜ், ஒவ்வொரு இந்து பெண்ணும் 4 குழந்தைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று

கூறினார். தொடர்ந்து பத்ரிகாஷ்ரம் சங்கராச்சாரியார் ஸ்ரீ வாசுதேவானந்த் சரசுவதி, பெரும்பான்மை அந்தஸ்தை நிலை நிறுத்த ஒவ்வொரு இந்து குடும்பமும் 10 குழந்தைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறினார். இதையெல்லாம்விட விஸ்வ இந்து பரிஷத்தின் தமிழ்நாடு கிளை சார்பில், 5 குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு இந்து பெண்ணுக்கும் பரிசு வழங்க திட்டமிட்டிருப்பதாக பொதுச்செயலாளர் கோபால்ஜி அறிவித்துள்ளார். (தினத்தந்தி ஜனவரி 28,2015,)

## காலம்கடந்த ஞானோதயம்!

இறைவன் மக்களுக்கு வகுத்து வழங்கும் வாழ்க்கை நெறி இயற்கையானது. குறைகளற்றது. அதைத் தவற விட்டோர்களின் நிலை இதுதான். மனிதர்களையும் அவர்களுக்காக இவ்வுலகையும் படைத்தவன் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே எச்சரித்தான்....

**'நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்) அளிக்கின்றோம் – அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்' (அல்–குர்ஆன் 17:31)**

தங்கள் உணவு மற்றும் வசதிகள் குறைந்துவிடுமோ என்று பயந்து சுயநல நோக்கோடு தங்கள் மக்களை தாங்களாகவே கொன்றொழித்தது மிகப்பெரிய பிழை என்று உணர இவ்வளவு காலம் பிடித்திருக்கிறது பாருங்கள். இன்னும் அதை வேறு பலர் உணரவில்லை என்பது வேதனை கலந்த வேடிக்கை! ஆம் சந்திரபாபு நாயுடு மேற்கண்டவாறு பேசியதைத் தொடர்ந்து நாட்டில் பலரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார் என்பதைக் காணும்போது உண்மையை உணர்ந்தவர்களால் சிரிக்காமல் இருக்க முடியாது!

பல கசப்பான அனுபவங்களையும் ஈடுசெய்ய முடியாத எண்ணற்ற இழப்புகளையும் சந்தித்துவிட்டு இறுதியில் ஞானோதயம் அடைவதால் என்ன பயன்?

இதனால் இனங்களின் இனப்பெருக்கம் தடைபட்டது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் இதைத் தவிர உண்டான வேறு பல இழப்புகளை ஈடு செய்வது யார்? மக்களை ஏமாற்றிய அரசாங்கங்கள் இதற்கு ஏதாவது நஷ்டஈடு திட்டங்கள் வைத்துள்ளார்களா?

- பல குடும்பங்களில் தந்தையும் தாயும் முதியோர் ஆன நிலையில் அவர்களைப் பராமரிக்கவோ அன்பு காட்டவோ ஆதரிக்கவோ ஆளில்லாத நிலை. அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தாலும் அவர்களுக்கு துணை நிற்கவோ ஆதரவளிக்கவோ ஆறுதல் அளிக்கவோ யாரும் இல்லை. முதியோர் இல்லங்களின் அவலங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.
- பல குடும்பங்கள் தங்களுக்கு ஆண் சந்ததி வேண்டும் என்பதற்காக

தங்களுக்குப் பிறந்த பெண்சிசுக்களை கொன்றொழித்தன. அதனால் அக்குடும்பங்களில் அந்தப் பெண்குழந்தைகளில் இருந்து கிடைக்கைகூடிய தனிபாசம், மென்மை, போன்ற விலைமதிப்பற்ற பல நன்மைகளும் இழப்படைந்த நிலை.

அரசாங்கங்கள் தங்கள் அறியாமையின் காரணமாகவும் தங்கள் கையாலாகாத்தனத்தை மறைப்பதற்காகவும் நாட்டு மக்களின்மீது திணித்த கொடுமைக்கு பல குடும்பங்கள் தங்கள் ஈடில்லாத பொக்கிஷங்களை தொலைத்து விட்டு நிற்கின்றன. பல உயிர்களை காவு கொடுத்து இறுதியில் அவர்கள் தேடிக் கொண்டது பாதிக்கப் பட்டவர்களின் சாபத்தை மட்டுமல்ல. இவ்வுலகத்தின் உரிமையாளனின் கோபத்தையும்தான்! அது நாளை இறுதித் தீர்ப்பு நாளின் போது நரகத்தின் உருவில் காத்திருக்கிறது!

**உயிருடன் புதைக்கப்பட்டவளும் வினவப்படும் போது. எக்குற்றத்திற்காக கொல்லப்பட்டாள் (என்று வினவப்படும் போது) (திருக்குர்ஆன் 82:8–9)**

# தம் கைகளாலேயே அழிவுக்குள்ளாகும் இனங்கள்

ஆய்வுகளின் படி ஒரு இனம் 25 வருடங்கள் நிலைநிற்க வேண்டுமானால் அதற்கு ஒரு குடும்பத்திற்கு 2.11 குழந்தைகளை அது ஈன்றெடுக்க வேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் அந்த இனம் வளர்வதற்கு வாய்ப்பே இல்லை. சரித்திர பதிவுகளின் படி 1.9 பிறப்பு விகிதம் கொண்ட எந்த இனமும் பெருகியதில்லை. 1.3 பிறப்பு விகிதம் கொண்ட எந்த இனமும் மீண்டும் தலை தூக்க எந்த வாய்ப்புமே இல்லை. அது அழிவதைத் தவிர வேறு வழியே இல்லை. அவ்வாறே அதைக் கஷ்டப்பட்டு திருத்தியமைக்க முயன்றாலும் எண்பது முதல் நூறு வருடங்கள் ஆகும்.

***Central Intelligence Agency*** யின் ***The World Factbook*** இணைய தளம் உலக நாடுகளில் இனப்பெருக்க விகிதம் (அதாவது ஒரு பெண்ணுக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை விகிதம்) பற்றி கீழ்கண்ட தகவலைத் தருகிறது.:



2014 இல் உலக நாடுகளின் இனப்பெருக்க விகிதங்கள் வருமாறு:.

- நைஜெர் ***(Niger)*** , மாலி, சோமாலியா உகண்டா போன்ற நாடுகள் 6.89 முதல் – 5.97 வரை
- அமெரிக்கா 2.01 அயர்லாந்து 2.00
- இங்கிலாந்து, சுவீடன், நார்வே,

டென்மார்க், பின்லாந்து, ஹாலந்து, பெல்ஜியம், ரஷ்யா, போன்ற நாடுகள் 1.9 முதல் 1.61 வரை

- இன்ன பிற ஐரோப்பிய நாடுகள் 1.54 முதல் 1.33 வரை
- ஜப்பான், போலந்து, கொரியா, ஹாங்காங், தாய்வான் 1.4 முதல் – 1.11 வரை
- சிங்கப்பூர் 0.8
- இங்கு இந்தியாவின் சராசரி இனப்பெருக்க விகிதம் 2.51 என்று குறிப்பிடுகிறது மேற்படி ஆவணம். (இந்தியாவுக்குள் சமூக ரீதியான விகிதங்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் கொடுக்கப் படவில்லை)

எந்த இனங்கள் பெருகுகின்றன? எந்த இனங்கள் அழிகின்றன? என்பதை இந்தப் புள்ளிவிவரங்களில் இருந்து நாம் கணிக்க முடியும்.

- எந்த நாட்டு மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்வை சாதாரணமாக எடுத்துக் கொண்டார்களோ அவர்களின் இனங்கள் பெருகுகின்றன. நாளைய உலக வளங்களை அவர்களின் தலைமுறைகள் சொந்தம் கொண்டாட உள்ளன.
- ஆனால் எந்த இனங்கள் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் முன்னோடியாக நின்று மனித வாழ்வை சொகுசாக மாற்றி அனுபவிக்கத் துடித்தனவோ ஆனால் அதேவேளையில் குடும்ப அமைப்பை மதிக்காது தங்களது தான்தோறித்தனம் காரணமாக சிதைத்தனவோ அவை அழிந்து வருகின்றன. அந்த நாடுகளில் தங்களின் சாதனைகளையும் சம்பாதித்தவற்றையும் ஓரளவுதான் அவர்களால் அனுபவிக்க முடிந்தது. மீதியை அனுபவிக்க அவர்களாலும் இயலாது. அவற்றை அனுபவிக்க அவர்களுக்கு பின்தொடரும் தலைமுறைகளும் இல்லை.

மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின் (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்..

“பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து (உங்களுக்கு) முன்னிருந்தவர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை நீங்கள் கவனித்துப் பாருங்கள்? அவர்கள் பெரும்பாலோர் இறைவனுக்கு இணை வைப்பவர்களாக இருந்தனர்” என்று (நபியே!) நீர் கூறும்.

. ஆகவே, அல்லாஹ்விடமிருந்து எவரும் தடுத்து நிறுத்த முடியாத (அந்தத் தீர்ப்பு) நாள் வருவதற்கு முன், நீர் உம் முகத்தை நிலையான மார்க்கத்தில் சரிபடுத்துவீராக் அந்நாளில் அவர்கள் (நல்லோர், தீயோர் எனப்) பிரிந்து விடுவார்கள் (திருக்குர்ஆன் *30:41–43*)

**ஆசிரியர் உரை**

# இறைநெறியைப் புறக்கணித்ததால் இன அழிவா?

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவன் வழங்கும் வாழ்க்கை நெறியே இயற்கையானது... குறைகளற்றது... நிற, இன, குல பேதமின்றி அனைத்து மக்களுக்கும் பக்குவமாகப் பொருந்தக்கூடியது. அதன்படி வாழ்வோருக்கு இம்மையிலும் பாதுகாப்பானது. மறுமையில் சொர்க்கத்தைப் பெற்றுத் தரக்கூடியது. அதை விடுத்து மனிதன் தானாக தன மனம்போன போக்கில் வகுத்துக்கொண்ட வாழ்க்கை நெறிகளேல்லாம் தற்காலிகமாக கவர்ச்சிகரமாக தோன்றினாலும் அவை அனைத்துமே காலம் செல்லச்செல்ல சாயம் வெளுத்து குறைகளை வெளிப்படுத்தக்கூடியதாகவே உள்ளன. அவற்றை நம்பி மோசம் போவோர் இம்மை வாழ்விலும் அதன் தீய விளைவுகளை சந்திக்கிறார்கள். மறுமையிலோ இறைவனைப் புறக்கணித்ததன் விளைவாக நரகத்தையும் அடைகிறார்கள்.

இயற்கை மார்க்கம் இஸ்லாம் அதனைப் பின்பற்றுவோரை திருமணம் செய்து கொள்ளுமாறும் அதன் மூலம் உருவாகும் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்குமாறும் வலியுறுத்துகிறது. திருமண உறவுக்கு அப்பாற்பட்ட ஆண்-பெண் உறவை சட்டவிரோதம் என்றும் அது சமூகத்தை சீர்கெடுக்கக் கூடியது என்றும் கண்டித்து அக்குற்றத்திற்குக் கடுமையான தண்டனைகளையும் பரிந்துரைக்கிறது. திருமண உறவில் ஆரம்பிக்கும் குடும்ப வாழ்வில் தாய், தந்தை, குழந்தைகள், உறவினர்கள் ஆகிய அனைவரதும் பொறுப்புகளையும் உரிமைகளையும் வரையறை செய்து அவற்றைப் பேணச் செய்து ஒரு ஆரோக்கியமான ஒழுக்கம் பேணக்கூடிய சமூகமும் நாடும் அமைய வழிகோலுகிறது இறைவனின் மார்க்கம்.

ஆனால் அதேவேளையில் மக்கள் மனம்போன போக்கில் தாங்களாகவே வகுத்துக்கொண்ட சட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுவதால் சமூகங்களில் பல குழப்பங்களும் அவலங்களும் நேர்கின்றன என்பதற்கு பல உதாரணங்கள் கூறலாம். பாலியல் வன்முறைகள், திருட்டு, கொள்ளை, இலஞ்சம், கொலை,போன்றவை கட்டுப்படுத்தப் படாமல் பெருகுவது.... வரதட்சணை, பெண்சிசுக்கொலை, போன்ற பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தொடர்வது.... ஜாதிக் கொடுமைகளும் தீண்டாமையும் இன்னும் தொடர்வது... என பலவற்றுக்கும் காரணம் இறைவன் தந்த எளிமையான தீர்வுகளை மக்கள் புறக்கணிப்பதனால்தான் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

இன்று பல நாடுகளிலும் அவர்களின் இனப்பெருக்கம் குறைந்து அவ்வினங்கள் அழிவுக்கு உள்ளாகி வருவது முக்கியமாக இறைநெறியைப்புறக்கணித்த காரணத்தினால்தான் என்பதே உண்மை!

## இன அழிவிற்குக் காரணங்கள்:

இந்த அவலத்திற்கு கீழ்கண்டவை காரணங்களாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது:

● இறைவனையும் மறுமை வாழ்வையும் பற்றிய நம்பிக்கை இல்லாததால் எப்படியும் வாழலாம், யாருக்கும் பதில் சொல்லவேண்டியதில்லை என்ற பொறுப்பின்மை மேலிடுகிறது. அதனால் மனம்போன போக்கில் பாலியல் உணர்வுகளை தணித்துக் கொள்ளும் போக்கு! மறைவில் செய்யப்படும் குற்றங்களுக்கும் இறைவனிடம் விசாரணையும் தண்டனையும் உண்டு என்பதை அறியாதவர்களும் இருக்கிறார்கள். அதை மறுப்பவர்களும் இருக்கிறார்கள்.

● திருமணம் என்ற உறவின் புனிதத்தை அறவே அலட்சியப் படுத்துதல். அதன் மூலம் உண்டாகும் பொறுப்புகளைக் கண்டு வெருண்டோடுதல்.

● திருமணம் இன்றியே முடிந்த வரை ஆண்- பெண் இணைந்து வாழுதல். பாலியல் உறவுகளை மனம்போன போக்கில் தணிக்கும்போது கருவுருவதைத் தவிர்த்தல். அதை மீறி உருவானாலும் அக்கருவை அல்லது சிசுவை ஈவிரக்கமின்றிக் கொல்லுதல். இங்கு விபச்சாரத்திற்கான குற்றமும் கொலைக்கான குற்றமும் இறைவனிடம் பதிவாகிறது என்பது பற்றி அறியாமை!

● திருமணங்கள் நடந்தாலும் குழந்தைகள் பெற்றுக்கொள்வதில் ஆர்வமின்மை. அத்துடன் குழந்தைப் பேற்றை எப்படியாவது தடுக்கப் முனைப்போடு செயல்படும் அரசாங்கங்களும் அவற்றுக்குத் துணைபோகும் ஊடகங்களும் சூழலும். வறுமைக்கு பயந்தும் வசதிகள் குறையும் என்று பயந்தும் சுயநல மனப்பான்மையாலும் குழந்தைப் பேறுகள் தடைபடுகின்றன. கருக்கொலையும் சிசுக்கொலையும் எந்தவிதக் குற்ற உணர்வுமின்றி சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

● திருமண வயதைத் தள்ளிப் போடுதல். வரதட்சணைக் கொடுமை, குடும்ப அமைப்பு, உறவுகள் இவற்றை விட பணத்திற்கும் பதவிக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் போன்ற இன்னும் பல காரணிகள் இந்த அவலத்திற்கு வெகுவாகத் துணைபோகின்றன.

இவ்வளவு நடக்கும்போதும் சிலர் இப்படியும் எண்ணலாம்.... இப்போது இல்லாத சந்ததிகளுக்காக ஏன் கவலைப் படவேண்டும்? இருப்பவர்களைப் பற்றி கவலைப் படுவோமே... என்று.

ஆனால் ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். இவ்வுலகில் வாழ நமக்கு எவ்வளவு உரிமை உள்ளதோ அதே அளவு உரிமை அவர்களுக்கும் இருந்திருக்கிறது. ரயில்வண்டியில் முதல் ஸ்டேஷனில் ஏறியவர்கள் தங்களுக்கே இரயில் சொந்தம் என்று பாவித்து இருக்கைகளில் கால்நீட்டிப் படுத்து சொந்தம் கொண்டாடினால் அதை அனுமதிக்க முடியுமா? அல்லது அவர்கள் பெட்டிகளுக்கு தாழிட்டுவிட்டு அடுத்த ஸ்டேஷனில் காத்திருந்த

பயணிகளுக்கு அனுமதி மறுத்தால் அதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதுபோலத்தான் இதுவும்!

இவ்வுலகிற்கு நுழைவு மறுக்கப்பட்ட சந்ததிகளின் உரிமைகளை தடுத்ததற்கான குற்றத்திற்காக இவ்வுலக அரசாங்கங்களோ நீதிமன்றங்களோ நம்மை தண்டிக்க மாட்டா. ஆனால் அனைத்தையும் கண்டுகொண்டு இருக்கும் இவ்வுலகின் அதிபதி அனைத்து உரிமை மீறல்களையும் குற்றங்களையும் அழியாத பதிவேடுகளில் ஆழமாகப் பதிவு செய்துள்ளான். இவை இறுதி நாளில் தவறாமல் விசாரிக்கப்பட உள்ளன!

● உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது– “எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?” என்று–

(திருக்குர்ஆன் 81: 8,9)

● அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள். எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான். (திருக்குர்ஆன் 99:6–8).

# குழந்தைக் கொலை!
# ... எவ்வளவு பெரிய கொடுமை!

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“உன்னுடைய குழந்தை உன்னுடன் உணவருந்துவதை அஞ்சி, அதை நீ கொலை செய்வது பெரும் பாவமாகும்.” (நூல்: புகாரி:7532 )

தான் பெற்ற குழந்தை தன் உணவில் பங்கு கேட்குமோ என்றும் தன் ஆடம்பரம் மற்றும் வசதிகள் குறைந்துவிடுமோ என்று தரம்தாழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தன் விளைவாக மனிதத் தன்மையையே இழந்து நின்றான் மனிதன். தொடர்ந்து இன்னும் நின்றுகொண்டு இருக்கிறான். சுயநலம் மற்றும் பொறுப்பின்மை மேலிட தான் பெற்ற குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொல்வது எவ்வளவு கொடிய மனப்பான்மை!. எந்த விலங்குகளும் கூட செய்யத் துணியாத கருணையற்ற அற்ற செயல் அது! அதைக் குடும்பக் கட்டுப்பாடு என்று அழகிய பெயரில் கொத்துக் கொத்தாக நிறைவேற்றின அரசாங்கங்கள். அதைக் கண்டித்தவர்களை ஏளனம் செய்தன ஊடகங்கள்! அதற்கு இணங்காதவர்களை நாட்டுநலனில் அக்கறையில்லாதவர்கள் என்று தூற்றின அவை!

நாட்டு வளங்களை முறைப்படி கையாளத் திறமையில்லாத சுயநல அரசியல் வாதிகளும் அதைத் தங்கள் குறைகளை மறைக்கக் கேடயமாக பயன்படுத்திக் கொண்டனர். 200 கோடி மக்களுக்குத் தேவையான

செல்வங்கள் 5 கோடி மக்களிடம் குவிந்து கிடக்கக் கண்டும் அவற்றை முறைப்படி பங்கீடு செய்து நாட்டின் வறுமையை அகற்றுவதற்கு பதிலாக இதை சாக்காக பயன்படுத்தினர். ஊழலால் நாட்டைக் கொள்ளை அடித்தவர்கள் மக்கள் தொகைப் பெருக்கமே நாடு முன்னேறாததற்குக் காரணம் என்று மக்களுக்கு மூளைச்சலவை செய்தனர்.

நாளும் பொழுதும் ஊடகங்கள் மூலம் மக்களை மூளைச்சலவை செய்தனர். "நாமிருவர் நமக்கு மூவர்" என்று தொடங்கி மூவர் இருவராகி இறுதியில் "நாமிருவர் நமக்கு ஒருவர்" என்று சுருக்கினர். இன்னும் சில சமூகப் பொறுப்பில்லாத கயவர்கள் "நாமே இருவர், நமக்கு ஏன் இன்னொருவர்?" என்று சிந்திக்கவும் செயல்படுத்தவும் செய்தனர்.

## பெண்சிசுக்கொலை

அப்படி இருக்கும்போது அந்த ஒருவர் பெண்ணாய் வந்துவிட்டால் என்ன நடக்கும்? அனைவருக்கும் தெரிந்ததே! ஆம், பெண் இனம் பல்வேறு விதமாக கொன்றொழிக்கப்பட்டது. பிறக்கும் முன்பே மருத்துவ மனைகளில் அவளைக் கொன்றார்கள், தப்பித் தவறி பிறந்துவிட்டால் கள்ளிப் பாலும் அரிசிமணிகளும் அவளைப் பதம் பார்த்தன! இவ்வாறு எந்தக் குற்ற உணர்வும் இல்லாமல் இந்த கூட்டக் கொலைகள் நாடு எங்கும் நிறைவேறின. இன்னும் நிறைவேறிக் கொண்டுவருகின்றன. நாட்டில் வனவிலங்குகளும் கால்நடைகளும் அழிவது கண்டு முதலைக்கண்ணீர் வடித்த "மனிதாபிமானிகளுக்கு' தன் இனம் அழிவது கண்டு அழுகை வரவில்லை! என்ன ஆச்சரியம்!

'நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதிகளையும்) அளிக்கின்றோம் - அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாகப் பெரும் பிழையாகும்' (அல்-குர்ஆன் *17:31*)

இது இவ்வுலகுக்கு உணவளித்துக் கொண்டிருப்பவனின் வாக்குறுதி! இதில் நம்பிக்கை கொண்டு அவன் வழங்கும் வாழ்க்கை நெறியை ஏற்று அவன்பால் திரும்புவதே சமூகங்களுக்கும் தனி நபர்களுக்கும் அவர்களின் ஈருலக வெற்றிக்கு வழிவகுக்கும்.

'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நான் ஓதிக் காண்பிக்கிறேன் எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள் பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள் வறுமைக்குப் பயந்து 'உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் – ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம் வெளிப்படையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள் இறைவன் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் – கொலை செய்யாதீர்கள் – இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்' (அல்-குர்ஆன் *6:151*)

# பாவமன்னிப்பு-
# இறைநெருக்கத்திற்கு ஒருவழி

அளவற்ற அருளாளனாம் நம் இறைவன் இவ்வுலக வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்து இதில் நம் ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட தவணையில் வந்து போகச் செய்துள்ளான். இப்பரீட்சையின் ஒரு பாகமாக ஷெய்த்தான் என்ற நம்மைப் பாவங்கள் செய்யத் தூண்டும் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு ஜீவிக்கும் நம்மோடு வாழ அனுமதித்துள்ளான். அவனது தூண்டுதலால் இறைவிசுவாசிகள் உட்பட பலரும் பாவங்களில் வீழ்ந்து விடுகிறார்கள். அதேவேளையில் இறைவன் தன் மன்னிப்பின் வாசலை மனிதனின் உயிர் தொண்டைக் குழியை அடையும்வரை திறந்தே வைத்துள்ளான்.

● **தனக்குத் தானே அநீதம் இழைத்துக் கொண்ட எனது அடியார்களே! நீங்கள் அல்லாஹ்வின் அருளை விட்டும் ஒரு போதும் நிராசை ஆகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பவனாக உள்ளான் என்று (நபியே) நீர் கூறுவீராக!. (அல்குர்ஆன் 39:53)**

அவனிடம் எவ்வாறு பாவமன்னிப்பை அன்னியோன்னியமாகக் கோருவது என்பதையும் அக்கருணையாளனே தன் தூதர் மூலமாகக் கற்றும் தருகிறான்.

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹும்ம! அன்த்த ரப்பீ. லா இலாஹ இல்லா அன்த்த. கல்க்த்தனீ. வ அன அப்துக்க. வ அன அலா அஹ்திக்க, வ வஅதிக்க மஸ்ததஅத்து. அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஅத்து. அபூ உ லக்க பி நிஅமத்திக்க அலய்ய, வ அபூ உ லக்க பி தன்பீ. ஃபஃக்ஃபிர்லீ. ஃபஇன்னஹு லா யஃக்ஃபிருத் துனூப இல்லா அன்த்த“ என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும். (பொருள்: அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை. நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்றவரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.)

இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறப்பவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.

அறிவிப்பு: ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) (ஷஹீஹ் புகாரி எண்:6306)

# பிரார்த்தனைகள் பயனுள்ளதாக....

மக்களில் பலரும் உண்மையான கடவுளை - அதாவது இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவனை - விட்டுவிட்டு அவன் அல்லாதவற்றிடம் கையேந்தி பிரார்த்திப்போராக உள்ளனர். படைத்தவனைத் தவிர மற்ற அனைத்தும் அவனால் படைக்கப்பட்டனவே. அல்லது மனிதர்களால் உண்டாக்கப்பட்டனவே. இவற்றுக்கு பிரார்த்தனைகளைக் கேட்பதற்கோ அல்லது அவற்றுக்கு பதில் அளிப்பதற்கோ எந்தவித ஆற்றலும் கிடையாது. இவை பெரும்பாலும் கடவுளின் பெயரால் மக்களை சுரண்டிப் பிழைக்க நினைப்பவர்களால் கற்பிக்கப் பட்டவையே என்பதை மக்கள் உணர்ந்தால் இவற்றின் பெயரால் ஏமாறுவதைத் தவிர்க்கலாம்.

## இறைவனைப் பற்றி அறிக!

இறைவனைப் பற்றிய தவறான புரிதல்களே இவ்வாறான தவறுகளுக்குக் காரணம். இறைவன் என்பவன் எப்படிப்பட்டவன்? இதோ இறைவனின் வேதத்தில் கூறப்படும் ஒரு சில பண்புகளை ஒரு உதாரணத்திற்காகக் காண்போம்:

(இங்கு அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

● **அவனே அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு நாயன் இல்லை மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன் அவனே அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன்.**

● **அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை அவனே பேரரசன் மிகப்பரிசுத்தமானவன் சாந்தியளிப்பவன் தஞ்சமளிப்பவன் பாதுகாப்பவன் (யாவரையும்) மிகைப்பவன் அடக்கியாள்பவன் பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.**

● **அவன்தான் அல்லாஹ் படைப்பவன் ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன் உருவமளிப்பவன் - அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன் வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே துதி செய்கின்றன - அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.**

**(திருக்குர்ஆன் 59:22-24)**

நாம் பிரார்த்திக்கும் முன் அந்த தெய்வங்களுக்கு மேற்கண்ட இறைத்தன்மைகள் உள்ளதா என்று ஆராய்ந்தால் நம் பிரார்த்தனைகள் வீணாவதைத் தவிர்க்கலாம். உண்மை இறைவனின் கோபத்தையும் மறுமையில் அவனது தண்டனைகளையும் தவிர்க்கலாம்.

இறைமார்க்கம் இஸ்லாம் இறைவனை பொருட்செலவின்றி இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்கவும் பிரார்த்திக்கவும் கற்றுக் கொடுக்கிறது.

# இறைவனிடமே நேரடியாகக் கேளுங்கள்!

திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதைக் கேளுங்கள்:

● (நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)

● உங்களுடைய இறைவன் கூறுகிறான். நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைக்குப் பதிலளிப்பேன். நிச்சயமாக என்னை வணங்குவதை விட்டும் பெருமையடிப்பவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகில் புகுவார்கள். (திருக்குர்ஆன் 40:60)

## இறைவனைத் தவிர பிறரிடம் கையேந்தி விடாதீர்கள்!

● கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? இறைவனுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிக்க குறைவேயாகும். (திருக்குர்ஆன் 27:62)

## இறைவன் அல்லாதவை சக்தியற்றவை

● அவனையன்றி நீங்கள் யாரை பிரார்த்திக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவி செய்யவோ, தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளவோ, சக்தி பெறமாட்டார்கள். (திருக்குர்ஆன் 7:197)

## ஒருங்கிணைந்த மனதுடன், பணிவாகப் பிரார்த்தியுங்கள்!

● (ஆகவே, விசுவாசிகளே!) உங்களுடைய இறைவனிடம் பணிவாகவும், அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள் –வரம்பு மீறியவர்கவளை நிச்சயமாக அவன் நேசிப்பதில்லை. (திருக்குர்ஆன் 7:55)

● பூமியில் (அமைதி உண்டாகி) சீர்திருத்தம் ஏற்பட்ட பின்னர் அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள் அச்சத்தோடும் ஆசையோடும் அவனை பிரார்த்தியுங்கள். நிச்சயமாக இறைவனின் அருள் நன்மை செய்வோருக்கு மிகச் சமீபத்தில் இருக்கிறது. (திருக்குர்ஆன் 7:56)

## இறைவனின் அருளில் நிராசை அடைந்துவிடாதீர்கள்!

'● வழிகெட்டவர்களைத் தவிர, வேறெவர் தம் இறைவனுடைய அருளைப்பற்றி நிராசை கொள்வர்' என்று (இப்ராஹீம் பதில்) சொன்னார். (திருக்குர்ஆன் 15:56)

# பிரார்த்தனையும் ஒரு வணக்கமே!

● நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், பிரார்த்தனை ஓர் வணக்கமாகும். ‘என்னை அழையுங்கள். நான் உங்களுக்குப் பதிலளிக்கிறேன்’ என்று உங்கள் இறைவன் கூறுகிறான்.

(அறிவிப்பவர் : நுஃமான் பின் பஷீர் (ரலி), நூல்: அபூதாவூத், திர்மிதி)

## முறையான பிரார்த்தனை ஒருபோதும் வீண்போகாது!

● நிச்சயமாக உங்கள் இறைவன் நித்திய ஜீவன். கொடையாளன். அவனுடைய அடிமைகளில் யாரேனும் அவனிடம் (எதையேனும் கேட்டு) கையேந்திவிட்டால் அதனை வெறுங்கையாக திருப்பிவிட அவன் வெட்கப் படுகிறான்.

(அறிவிப்பவர்: ஸல்மான் அல்ஃபாரிஸி-ரலி, நூல்: அபூதாவூத், திர்மிதி)

● ஒரு முஸ்லிம், பாவச்செயல் மற்றும் இரத்த பந்த உறவுகளை முறிக்காத எந்தப் பிரார்த்தனையை இறைவனிடம் கேட்டாலும் அதற்கு இறைவன் (மூன்றில்) ஏதேனும் ஒரு விதத்தில் பதில் அளிக்கிறான்.

1) அவன் கேட்டதை கொடுத்து விடுகிறான்.

2) மறுமைக்காக அதன் நன்மையை சேர்த்து வைக்கிறான்.

3) பிரார்த்தனையின் அளவு அவனுக்கு ஏற்படும் தீங்கை போக்கிவிடுகிறான்.

என்று நபி(ஸல்) அவர்கள் கூறியபோது ஒரு நபித்தோழர், இறைவனின் தூதர்(ஸல்) அவர்களே! நாங்கள் அதிகமாக பிரார்த்தனை செய்யப் போகிறோம் என்றார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், இறைவனும் மிக அதிகமாக்குவான் என பதிலளித்தார்கள்.

(அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ (ரலி), நூல்: ஹாகிம்)

## பாவமானதைக் கேட்காதீர்கள்!

● இம்மண்ணுலகில் இருக்கும் எவரும் இறைவனிடம் எதைக் கேட்டாலும் இறைவன் அதை கொடுக்காமல் இருப்பதில்லை. ஆனால் அவர் பாவமானவற்றையும் உறவினரை பகைப்பதையும் பிரார்த்திக்காதிருக்க வேண்டும். (அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ (ரலி), நூல்: ஹாகிம்)

## வலியுறுத்திக் கேளுங்கள்!

● உங்களில் எவரேனும் பிரார்த்தனை செய்தால் அதனை வலியுறுத்திக் கேட்கட்டும். நீ விரும்பினால் தா! என்று எவரும் கேட்கவேண்டாம். ஏனெனில் அவனை நிர்ப்பந்தம் செய்வோர் எவருமில்லை.

(அறிவிப்பவர் : அனஸ் (ரலி), நூல் : புகாரீ)

## அவசரப்படாதீர்கள்!

● நான் என்னுடைய இரட்சகனிடம் பிரார்த்தனை செய்தேன், ஆனால் அவன் அதற்கு பதிலளிக்கவில்லை என்று கூறி அவசரப்படாதவரை உங்கள் பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரீ, முஸ்லிம்)

# இஸ்லாமிய அறிவியலின் வரலாறு

**பி.ஏ. கிருஷ்ணன்**

பழங்கால அறிவியலுக்கும் தற்கால அறிவியலுக்கும் பாலமாக இருந்தவர்கள் இஸ்லாமிய அறிவியலாளர்கள்.

## அல்-குவாரிஸ்மி - யார் இவர்?

ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் வாழ்ந்த இந்த அறிஞர் அல்ஜிப்ராவின் தந்தை என அறியப்படுபவர். சந்திரனில் ஒரு பள்ளத்தாக்கு இவர் பெயரால் அழைக்கப்படுகிறது. அவர் எழுதிய பல புத்தகங்களில் மிகவும் புகழ்பெற்றவை இரண்டு. முதலாவது ‘இந்திய எண்களைக் கொண்டு கணக்கு’. இந்தப் புத்தகத்தின் மூலமாகத்தான் இப்போது அரேபிய எண்கள் என அழைக்கப்படும் இந்தியாவில் பிறந்த எண்கள் உலகம் முழுவதும் அறியப்பட்டன. இரண்டாவது, ‘ஸிஜ் அல் ஸிந்த் ஹிந்த்’ என்று அறியப்படும் வானவியல் அட்டவணை. சூரியன், சந்திரன் மற்றும் அவரது காலத்தில் அறியப்பட்டிருந்த ஐந்து கிரகங்களின் பாதைகளின் அட்டவணை. இவருக்கு முன்னாலேயே எட்டாவது நூற்றாண்டில் பிரம்மகுப்தரின் பிரம்ம சித்தாந்தம் என்ற வானவியல் நூல் அல்ஃபசாரி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது. ஆனால் இவரது அட்டவணைதான் அரேபியர்கள் தாங்களாகத் தயாரித்த முதல் அட்டவணை.

குவாரிஸ்மி வானவியல், கணிதத்தோடு நின்றுவிட வில்லை. ‘உலகத்தின் வடிவம்’ என்ற பூகோளப் புத்தகத்தையும் எழுதினார். இரண்டாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்டிரியாவில் வாழ்ந்த தாலமி கிரேக்க மொழியில் எழுதிய ‘பூகோளம்’ என்ற புகழ்பெற்ற புத்தகத்தைத் தழுவி எழுதிய அந்தப் புத்தகம், உலகத்தின் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்களைப் பற்றிப் பேசுகிறது.

## உலுக் பெக்

பெரிய விஞ்ஞானியான உலுக் பெக் தைமூரின் பேரன். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அரசரான அவருக்கு அறிவியலில் தீராத ஈடுபாடு. ‘மதங்கள் பனிபோல மறைந்துவிடும். பேரரசுகள் அழிந்துவிடும். ஆனால், அறிவியல் நூல்கள் காலம் உள்ள வரையில் நிற்கும்’ என்ற புகழ்பெற்ற மேற்கோளுக்குச் சொந்தமான உலுக் பேக் எழுதிய ‘ஸிஜ் சுல்தானி’என்ற நட்சத்திரங்களின் அட்டவணை, இரவில் பாலைவனங்களில் பயணம் செய்பவர்களுக்கு உறுதுணையாகக் கருதப்பட்டது. இந்தப் புத்தகத்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருக்கிறது. ஷாஜஹான் காலத்தில் இந்தப் புத்தகத்தைத் தழுவி ‘ஸிஜ்-இ-ஷாஜஹானி’ என்ற புத்தகம் எழுதப்பட்டது. இந்த புத்தகத்தைச் ‘சித்தாந்த சிந்து’ என்ற பெயரால் நித்யானந்தா என்பவர் வட மொழியில் மொழிபெயர்த்தார்.

உலுக் பெக், வானவியல் ஆய்வுக் கூடம் ஒன்றை சாமர்கண்ட் நகரத்தில் அமைத்தார். கிட்டத்தட்ட முழுவதுமாக அழிந்துவிட்ட இந்த ஆய்வுக்கூடத்தின் பாணியில்தான் டெல்லி, ஜெய்ப்பூர் நகரங்களில் இருக்கும் ஜந்தர் மந்தர் (மந்திர யந்திரம்) என்று அழைக்கப்படும் வானவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

## அறிவுக் கூடம்

அறிவைத் தேடுதல் மிகவும் அவசியம் என்று நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நினைத்தார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. 'இல்ம்' என்று அழைக்கப்படும் அறிவைக் குறிக்கும் அரேபியச் சொல்லும், அதைச் சார்ந்த மற்ற சொற்களும் 700-க்கும் மேல் புனித குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஆண்ட அரசர்கள் இதை நன்கு அறிந்திருந்தார்கள். கலீஃபா அல் மமுன் 830-ம் ஆண்டில் பாக்தாத் நகரில் பாய்த் அல் ஹிக்மா என்று அழைக்கப்படும் அறிவுக்கூடம் ஒன்றை அமைத்தார். இரண்டு லட்சம் தினார்கள் செலவில் அமைக்கப்பட்ட அந்தக் கூடம், அறிவியல் ஆய்வுமையமாகவும் மொழிபெயர்ப்பகமாகவும் இயங்கியது.
கூடத்துக்குத் தலைமை தாங்கியவர் ஹுனைன் இபின் இஷக் ('ஜான், ஐசக்கின் மகன்' என்பது இந்தப் பெயரின் பொருள்) என்று அழைக்கப்பட்ட கிறிஸ்தவர். இவரது தலைமையில் கேலன், அரிஸ்டாட்டில், பிளாட்டோ, ஹிப்பாகிரிடஸ், தாலமி, டியஸ்காரிடிஸ் போன்ற அறிஞர்களின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. வடமொழியிலிருந்தும் பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. ஹுனைனுக்குப் புத்தகத்தின் எடைக்கு எடை தங்கம் வழங்கப்பட்டதாம். கிரேக்க லத்தீன் நூல்களில் பல தப்பிப் பிழைத்துத் திரும்ப மேற்குலகுக்குக் கிடைத்ததென்றால், அதற்கு அவர்கள் இஸ்லாமியர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

## அல்-ராசியும் அவிசென்னாவும்

ட்ரக், ஆல்கஹால், ஆல்கலி, ஸிரப், ஷுகர், ஸ்பினாச் போன்ற சொற்கள் அரபிய மொழியிலிருந்து ஆங்கிலத்துக்குக் கிடைத்தவை. இவை எல்லாம் இஸ்லாமிய மருத்துவப் புத்தகங்களில் புழங்கியவை. இஸ்லாமிய மருத்துவர்களில் தலையாயவர்களாக இருவரைக் குறிப்பிடலாம். முதலாமவர் எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அல்-ராசி. இவர் பத்து பாகங்களாக எழுதிய 'மன்சூரின் மருத்துவப் புத்தகம்' உடற்கூறு, அறுவைச் சிகிச்சை, மருந்துகள், நோயை அறிதல், நோயைக் கட்டுப்படுத்தும் முறை போன்ற மருத்துவத்தின் எல்லா அங்கங்களையும் பற்றிக் கூறுகிறது. அல்-ராசி தனது மற்றொரு புத்தகத்தில் கூறுகிறார்:

“மருந்துகளின் பயன்களைப் பற்றிச் சிலர் உண்மையைச் சொல்கிறார்கள். சிலர் சொல்வது பொய். எனவே, நாம் செய்யக் கூடியது, நமது அனுபவத்தின் மூலமாக அறிவதுதான். அறிந்ததை அங்கங்கே விட்டுவிடக் கூடாது. சேர்த்து, பகுத்து வைக்க வேண்டும். எந்த மருந்தின் பயனையும் நாங்கள் மற்றவர் சொன்னார்கள் என்று நம்பத் தயாராக இல்லை. ஆராய்ந்து அதனால் பலன் இருந்தால் மட்டுமே நம்புவோம்.”

அல்-ராசி ஏழைகளை மறக்கவில்லை. ‘மருத்துவரிடம் போக முடியாதவர்களுக்கு’ என்ற ஒரு புத்தகத்தையும் எழுதியிருக்கிறார்.

இஸ்லாம் தந்த மற்றொரு பேரறிஞர் பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அவி சென்னா என்று அழைக்கப்படும் இபின் சென்னா. இவரது இரண்டு புத்தகங்கள் இன்றுவரை பேசப்படுபவை. ஒன்று ‘கிதாப் அல்-கானூன்’ மற்றது ‘கிதாப் அல்-ஷிஃபா’ என்று அழைக்கப்படும் மருத்துவப் புத்தகம்,. ஐந்து பாகங்கள் கொண்ட இந்தப் புத்தகம் 10 லட்சம் வார்த்தைகளில் அன்று வரை அறியப்பட்ட மருத்துவ முறைகளைப் பற்றியும் மருந்துகளைப் பற்றியும் சொல்கிறது. பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய நாடுகளிலும், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளிலும் இவரது புத்தகம்தான் மருத்துவ உலகில் கோலோச்சி வந்தது.

## அல்-பிரூனி

இஸ்லாமிய அறிஞர்கள் புனித குரானைத் தவிர, வேறு எங்கும் செல்ல மாட்டார்கள் என்ற தவறான எண்ணம் நம்மில் பலருக்கு இருக்கிறது. இருப்பவர்கள் அல்-பிரூனி பதினொன்றாம் நூற்றாண்டில் எழுதிய ‘இந்தியா’ நூலைப் படிக்க வேண்டும். ‘முத்துக்களும் கூழாங்கற்களும் கலந்தது இந்திய அறிவியல்’ என்பது அவரது கூற்று. அறிவியல் பற்றிய தெளிவான புரிதல் இருந்தாலும், அதை வகைப்படுத்தி அளிப்பதில் கவனம் காட்டாததைப் பற்றியே அவர் குறிப்பிடுகிறார். பூமியின் ஆரத்தை அன்றே துல்லியமாக அளந்த சகலகலா வல்லவர் பிரூனி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இஸ்லாமுக்கும் அறிவியலுக்கும் நீண்ட தொடர்பு இருந்திருக்கிறது. அது அறுந்துபோகாமல் பார்த்துக்கொள்வது இன்றைய இஸ்லாமியர்களின் கைகளில் இருக்கிறது.

நன்றி: தி இந்து

**நிர்வாக அறிவிப்பு** : திருக்குர்ஆன் நற்செய்தி மலர் மற்றும் ஹவுஸ் ஆஃப் பீஸ் வெளியீடுகளின் வாசகர்களும் இதழை மொத்தமாகப் பெற விரும்புவோரும் விநியோகம் தொடர்பான தேவைகளுக்கும் புகார்களுக்கும் தொடர்பு கொள்ளவும்:

**Circulation Manager**

**House of Peace, P.O Box No. 1726, Bangalore- 560017 Ph: 09742899305**

# திருக்குர்ஆன் தூவிய அறிவியலின் விதைகள்

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் எளிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த பாலைவன மக்களிடம் எப்படிப்பட்ட சிந்தனை இருந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் கவலையெல்லாம் உணவைப் பற்றியும் அதை சம்பாதிப்பதைப் பற்றியும் மட்டுமே அதிகமாக இருந்திருக்கும்! ஆனால் அங்குதான் இன்றைய அறிவியலுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்த விஞ்ஞானிகள் உருவானார்கள் என்பது ஆச்சரியமாக இல்லையா?

அதற்குக் காரணம் அந்தப் பாலைவன மணலில் திருக்குர்ஆன் தூவிய விதைகளே! ஆம், அந்தப் பாமரர்களை திருக்குர்ஆன் வானத்தையும், பூமியையும் மலைகளையும் விலங்கினங்களையும் பற்றி சிந்திக்கத் தூண்டியது.

● இறைவனின் உள்ளமையை மக்களுக்கு பகுத்தறிவு பூர்வமாக உணர்த்தும் வண்ணம் திருக்குர்ஆன் இறைவனின் படைப்பினங்களின்பால் அவர்களின் கவனத்தை திருப்பி அவற்றை ஆராயச் சொல்கிறது:

*88:17* .(நபியே!) ஒட்டகத்தை அவர்கள் கவனிக்க வேண்டாமா? அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது என்று–

*88:18* .மேலும் வானத்தை அது எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது? என்றும்,

*88:19* .இன்னும் மலைகளையும் அவை எப்படி நாட்டப்பட்டிருக்கின்றன? என்றும்,

*88:20.* இன்னும் பூமி அது எப்படி விரிக்கப்பட்டிருக்கிறது? (என்றும் அவர்கள் கவனிக்க வேண்டாமா?)

● மனிதன் அந்தக் காலத்திலும் இந்தக் காலத்திலும் கண்டும் அனுபவித்தும் வரும் இயற்கையின் அற்புதங்களில் ஒன்று இரவுபகல் மாற்றமும் விண்ணில் கண்டுவரும் கோள்களும் அவற்றின் இயக்கங்களும். இவற்றை ஆராயத் தூடுகின்றன இந்த வசனங்கள்:

*3:190* .நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.

*10:5.* அவன்தான் சூரியனைச் (சடர்விடும்) பிரகாசமாகவும், சந்திரனை ஒளிவுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு(ச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான்' அல்லாஹ் உண்மை(யாக தக்க காரணம்) கொண்டேயல்லாது இவற்றைப் படைக்கவில்லை – அவன் (இவ்வாறு) அறிவுள்ள மக்களுக்குத் தன்

அத்தாட்சிகளை விவிரிக்கின்றான்.

● மழையும் அது விளைவிக்கும் பயிர்களும் அவற்றை உண்டு வளரும் ஜீவிகளும் சூரியனும் சந்திரனும் என அனைத்தும் இறைவனின் எண்ணற்ற அற்புதங்களை தாங்கி நிற்பதை ஆராயத்தூண்டுகின்றன இறை வசனங்கள்:

*16:10.* அவனே வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்கிறான் அதிலிருந்து உங்களுக்கு அருந்தும் நீரும் இருக்கிறது; அதிலிருந்து (உங்கள் கால்நடைகளை) மேய்ப்பதற்கான மரங்கள் (மற்றும் புற்பூண்டுகளும் உண்டாகி) அதில் இருக்கின்றன.

*16:11* .அதனைக் கொண்டே, (விவசாயப்) பயிர்களையும், ஒலிவ (ஜைத்தூன்) மரத்தையும், பேரீத்த மரங்களையும், திராட்சைக் கொடிகளையும், இன்னும் எல்லாவகைக் கனிவர்க்கங்களிலிருந்தும் அவன் உங்களுக்காக விளைவிக்கிறான் – நிச்சயமாக இதில் சிந்திக்கும் மக்கள் கூட்டத்தாருக்கு(த் தக்க) அத்தாட்சி இருக்கிறது.

*16:12* .இன்னும் அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்க(ள் நலன்க)ளுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான் அவ்வாறே நட்சத்திரங்களும் அவன் கட்டளைப் படியே வசப்படுத்தப்பட்டுள்ளன – நிச்சயமாக இதிலும் ஆய்ந்தறியக் கூடிய மக்கள் கூட்டத்தாருக்கு(த் தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன.

*16:13* .இன்னும், பூமியில் அவன் படைத்திருப்பன பல விதமான நிறங்களையுடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள், போன்ற)வையுமாகும் நிச்சயமாக இதில் (அல்லாஹ்வின் அருள் கொடைகளை நன்றியுடன்) நினைவு கூரும் மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சியுள்ளது.

● இன்னும் மழையும் கடலும் கப்பல்களும் என அனைத்துமே இறைவனின் அத்தாட்சிகளாக நிற்பதை சிந்திக்கச் சொல்கிறான் இறைவன்:

*16:14.* நீங்கள் கடலிலிருந்து நய(மும், சுவையு)முள்ள மீன் போன்ற மாமிசத்தை புசிப்பதற்காகவும், நீங்கள் அணிந்து கொள்ளக்கூடிய ஆபரணத்தை அதிலிருந்து நீங்கள் வெளிப்படுத்தவும் அவன் தான் அதனையும் (கடலையும்) வசப்படுத்தித் தந்தான் இன்னும் அதில் தண்ணீரைப் பிளந்து கொண்டு செல்லும் கப்பலை நீங்கள் காணுகிறீர்கள் (பல்வேறு இடங்களுக்குச் சென்று) அவன் அருட்கொடையை நீங்கள் தேடவும், நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டும் (அதை) இவ்வாறு வசப்படுத்திக் கொடுத்தான்.

இவைபோன்ற இயற்கையை ஆராயத் தூண்டும் வசனங்களே பாலைவனத்துப் பாமரனையும் அறிவியலின் முன்னோடிகளாக ஆக்கின. அவர்கள் வகுத்த அடிப்படைகளே பிற்காலத்தில் உலகெங்கும் பரந்து பயன்பாடுகளை ஈந்தன. எல்லாப்புகழும் இறைவனுக்கே!

# உலக சரித்திரத்தில் முதல் கொலை!

நாம் ஆதித் தந்தையான ஆதம் அவர்களின் புதல்வர்கள் பற்றிய வரலாற்றைத் திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

"ஆதமுடைய இரு குமாரர்களின் உண்மை வரலாற்றை நீர் அவர்களுக்கு ஓதிக் காண்பியும் அவ்விருவரும் குர்பானி கொடுத்தபோது, ஒருவரிடமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றவரிடமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. "நான் நிச்சயமாக உன்னைக் கொலை செய்து விடுவேன்" என்று கூறினார்.

அதற்கு "மெய்யாகவே அல்லாஹ் ஏற்றுக் கொள்வது பயபக்தியுடையவர்களிடமிருந்துதான்" என்று கூறினார்.

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் என்று பொருள்)

அன்றியும், நீ என்னை வெட்டுவதற்காக என்னளவில் உன் கையை நீட்டுவாயானால் நான் உன்னை வெட்டுவதற்காக என் கையை உன்னளவில் நீட்ட மாட்டேன் - ஏனெனில் நான் நிச்சயமாக உலகங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்" என்னுடைய பாவத்தையும் உன்னுடைய பாவத்துடன் நீ சுமந்து கொண்டு வருவதையே நிச்சயமாக நான் விரும்புகிறேன். அப்பொழுது நீ நரகவாசிகளில் ஒருவனாகி விடுவாய். இதுதான் அநியாயக்காரர்களின் கூலியாகும்.

அவருடைய மனம் தம் சகோதரரைக் கொன்று விடுமாறு தூண்டிற்று. ஆகவே அவர் சகோதரரைக் கொலை செய்து விட்டார் அதனால் அவர் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராகிவிட்டார்.

பின்னர் தம் சகோதரரின் பிரேதத்தை எவ்வாறு மறைக்க வேண்டுமென்பதை அவருக்கு அறிவிப்பதற்காக அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பினான் அது பூமியைத் தோண்டிற்று. அவர் "அந்தோ! நான் இந்த காகத்தைப் போல் கூட இல்லாதாகி விட்டேனே! அப்படியிருந்திருந்தால் என் சகோதரனுடைய பிரேதத்தை நான் மறைத்திருப்பேனே!" என்று கூறி கைசேதப்படக் கூடியவராகிவிட்டார்.

இதன் காரணமாகவே, நிச்சயமாகவே எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ்வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என்று இஸ்ராயிலின் சந்ததியினருக்கு விதித்தோம். (அல்குர்ஆன் 5 : 27-32)

**என் கேள்விக்கென்ன பதில்?**

# பெற்றோரின் காலில் விழுந்து வணங்குதல்

● **கேள்வி:** பெற்றோரின் காலில் விழுந்து வணங்குவதில் தவறுண்டா ?

**- வி.பி. பாலச்சந்தர், ஓசூர்.**

பதில்: கண்டிப்பாக பெற்றோர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களே என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் நமக்குச்செய்யும் தன்னலமில்லாத சேவைக்கு நன்றிக்கடன் அவர்களின் கால்களை பலர் முன்னிலையிலோ அல்லது தனிமையிலோ வணங்கி எழுதலால் நிறைவேறிவிடுவது இல்லை. மாறாக அவர்களோடு அன்பாக இருப்பதும், அவர்கள் மனம்நோகாமல் பார்த்துக்கொள்வதும் அவர்கள் வயது முதிர்ந்து பலவீனமாக ஆகும்போது அவர்களைத் துரத்தியடிக்காமல், முதியோர் இல்லங்களில் ஒப்படைக்காமல் அவர்களை மரணம் வரை பரிபாலிப்பதுதான் அவர்களுக்கு செய்யும் உண்மையான பயனுள்ள நன்றிக்கடன்.

இந்த உணர்வு மனித மனங்களுக்குள் வரவேண்டுமானால் அங்கு உண்மையான இறையச்சம் இருக்க வேண்டும். அதாவது என்னையும் எனது பெற்றோரையும் படைத்த இறைவன் என்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற பொறுப்புணர்வுக்கே இறையச்சம் என்றுகூறப்படும். அந்த இறையச்சம் மனிதனுக்குள் வரவேண்டுமானால் அகிலம் அனைத்தையும் நம் அனைவரையும் படைத்துப் பரிபாலித்து வரும் இறைவனை மட்டுமே வணங்கும் பண்பு நமக்கு வரவேண்டும். அவனே நமமை அரவணைக்க நமக்கு தாய் தந்தையை தந்து அவர்களுக்குள் நம் மீது வற்றாத பாசத்தை விதைத்தான். அவனிடம் நமக்கு பயமும் பக்தியும் இருக்க வேண்டும்.

சர்வவல்லமை கொண்ட அந்த ஏக இறைவனை வணங்குவதற்கு பதிலாக மற்றவர்களை அல்லது ஜடப்பொருட்களை வணங்கும்போது சீரியஸ்னஸ் அகன்று போவதால் இறையச்சம் அடிபட்டுப்போகிறது. அதனால்தான் இன்று பிள்ளைகள் காதல் காமம் என்று வரும்போது அவர்களைக் கண்ணும் கருத்துமாக இரவுபகல் பாராமல் தியாகங்கள் பலசெய்து வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை தூக்கி எறிந்து செல்லும் நிலையை நாம் பரவலாகக் காண்கிறோம். எனவே உண்மையான இறையச்சம் உண்டாக இறைவனைத் தவிர வேறு யாரையும் - அவர்கள் பெற்றோர்களே ஆனாலும் சரி- வணங்கக் கற்றுக் கொடுப்பது நல்லதல்ல. இறைவனும் தனது இறுதி வேதத்தில் நமக்கு இவ்வாறு கட்டளையிடுகிறான்:

**அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால்,**

அவர்களை உ.:ப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் – அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் – இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!'' (திருக்குர்ஆன் 17:23)

மட்டுமல்ல இன்னும் ஒருபடி மேலே சென்று இறைவன் எவ்வாறு எச்சரிக்கிறான் பாருங்கள்:

"தனது தாய், தந்தை பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய், துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து, (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள். (அவன் பிறந்த) பிறகும் இரண்டு வருடங்களுக்கப் பின்னரே அவனுக்கு பால் மறக்கடித்தாள். (ஆகவே. மனிதனே) நீ எனக்கும், உன்னுடைய தாய், தந்தைக்கும் நன்றி செலுத்தி வா, (முடிவில் நீ) என்னிடமே வந்து சேர வேண்டியதிருக்கிறது. (திருக்குர்ஆன் 31:14)

----------------------

**என் கேள்விக்கென்ன பதில்?**

# பசுவை அறுத்து உண்பது

**கேள்வி:** பசுவை நாங்கள் தலைமுறை தலைமுறையாக கடவுளாக நினைத்து வணங்கி வருகிறோம். இதை நீங்கள் அறுத்து உண்பது எங்களைப் புண்படுத்தாதா?

**- வி.பி. பாலச்சந்தர், ஓசூர்.**

**பதில்:** அய்யா, உங்கள் உணர்வுகளை மதிக்கிறோம். அதேவேளையில் இதை மறுபரிசீலனை செய்யக் கோருகிறோம்... இஸ்லாமிய கடவுள் கொள்கை இறைவன் என்றால் இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் அவனையே வணங்கி வழிபடவேண்டும் என்று கூறுவதை அறிவீர்கள். அவனல்லாத அனைத்தும் அவனது படைப்பினங்களே என்பதால் அவற்றை வணங்குவதோ வழிபடுவதோ அவற்றிடம் பிரார்த்திப்பதோ வீணும் பாவமும் ஆகும் என்கிறது இஸ்லாம்.

சர்வவல்லமையும் சர்வஞானமும் கொண்ட அவனுக்கு ஒப்பாக உயிரினங்களையோ ஜடப்பொருட்களையோ காட்டி அவற்றை எல்லாம் கடவுள் என்று கற்பிக்கும் போது மனித மனங்களில் இருந்து கடவுளைப் பற்றிய சீரியஸ்னஸ் அகன்றுபோய் விடுகிறது என்பதை அறிவீர்கள். அதன் காரணமாக இறைவனுக்கு நாம் நம் செயல்களுக்கு பதில்சொல்லியாகவேண்டும் என்ற பொறுப்புணர்வு சமூகத்தில் இல்லாமல் போய்விடுகிறது. அதனால் பாவங்கள் அதிகரிக்கின்றன என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறோம். இவ்வாறு தனிநபர் நல்லொழுக்கத்திற்கு இது தடையாகவில்லையா?

அடுத்ததாக பசு என்பது நமது பரிபாலனத்தில் வளரும் ஒரு பிராணி. அதை நாம்தான் முறையாகப் பரிபாலிக்க வேண்டும். அது நம் மீது கடமையும்

கூட. அதனை வணங்குவதை அது உணரும் என்பது உங்கள் நம்பிக்கையாக இருக்கக்கூடும். ஆனால் அதைவிட அப்பசுவை மகிழ்விப்பது அதற்கு வேண்டிய உணவையும் இருப்பிடத்தையும் தந்து பரிபாலிப்பதே. அதுவே நாம் அதனிடமிருந்து பெறும் சேவைக்கு உண்மையான நன்றிக் கடனாக அமையும்.

அடுத்ததாக அதனை வணங்கும் செயல் அந்த விலங்கினத்துக்கு எதிராகச் செய்யும் அநீதியாகவும் அமைந்துவிடும். பசுவை கடவுள் என்று பாவிக்கும்போது அதைக் கொல்வது பாவம் என்று ஆகும். உதாரணமாக, ஒரு ஏழை விவசாயி தன் வயதான மாட்டை அல்லது பசுவை விற்றால்தான் வேறு காளையை அல்லது பசுவை வாங்கமுடியும். தன் தொழிலைத் தொடரவும் முடியும். பால்தராத பசுவை விற்கச் சந்தைக்குக் கொண்டு வருகிறார். ஒரு இறைச்சிக்கடைக் காரர் வாங்கவும் தயாராக உள்ளார். அப்போது .'பசுவதைத் தடைச் சட்டம் என்ற பெயரில் இதை நாம் தடுத்தால் என்ன நடக்கும்? அந்த ஏழை விவசாயியின் பிழைப்பில் அநியாயமாக மண்ணைப் போடுகிறோம். அவருக்கே உணவுக்கு திண்டாட்டமாக இருக்கும்போது அந்த மாட்டுக்கு அவரால் உணவளிக்க முடியுமா? அவர் அதைப் பராமரிக்க முடியாத நிலையில் கட்டவிழ்த்து விட்டால் அடுத்தவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இரையாகிறார். வேறுவழியின்றி கட்டிப்போட்டால் அது பசியால் துடிதுடித்து படிப்படியாக இறக்கிறது. இதுதான் மனிதாபிமானமா?....... இவ்வாறு ஒன்றுக்குப் பின் ஒன்றாக தொடர் விபரீதங்களுக்கு நாம் காரணமாகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அனைத்து அநீதிகளுக்கும் பாவங்களுக்கும் மறுமையில் இறைவனின தண்டனையும் கிடைக்கும் . எங்கள் பதில் உங்களைப் புண்படுத்தி இருந்தால் மன்னிக்கவும்.

# அடிமட்ட தொண்டனுக்கும் மரியாதை!

நபித்தோழர் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள்:

பள்ளிவாசலைப் பெருக்குபவராக இருந்த ஒரு கறுத்த ஆண் அல்லது கறுத்த பெண்மணி இறந்துவிட்டார். அவரைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் விசாரித்தபோது அவர் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். 'இதை (முன்பே) என்னிடம் நீங்கள் சொல்லியிருக்க வேண்டாமா? அவரின் அடக்கத் தலத்தை எனக்குக் காட்டுங்கள்!' என்று நபி(ஸல்) கூறிவிட்டு அவரின் அடக்கத்தலத்துக்கு வந்து அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.

(ஜனாஸா தொழுகை என்றால் இறந்தவருக்காக நடத்தப்படும் சிறப்புத் தொழுகை)

# கருணைக்கொலை எனும் “விருது”!!

**விக்கிபீடியா இணையதளம் தரும் அதிர்ச்சித் தகவல் இது:**

இந்தியாவின் தமிழ்நாட்டில், குறிப்பாக மதுரை, விருதுநகர் போன்ற பகுதிகளில், பெண் சிசுக் கொலைபோல் முதியோர் கொலைகள் அதிகரித்துள்ளதாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

**வேர்களை வெறுக்கும் விழுதுகள்**: பெற்றோரைக் கொல்லும் பிள்ளைகளின் இக்கொடூரச் செயலை கருணைக்கொலை என தவறாக குடும்ப உறுப்பினர்களும், சமூகமும் கருதுவதுடன், குற்ற உணர்வற்ற சமூகச் சடங்கு எனக் குறிப்பிடத் தவறுவதில்லை. முதியோர் கொலையை அறிந்தவர்கள் கூட அத்தகவலை காவல் துறைக்கு தெரிவிப்பதில்லை. எனவே காவல்துறையினரால் குற்றம் செய்தவர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொண்டு, முதியோர் கொலைகளை தடுக்க இயல்வதில்லை.

**வழிமுறைகள்:**

படுத்த படுக்கையாக உள்ள முதியோர்களின் உயிரை வெகு விரைவில் பறிக்க தமிழ்நாட்டில் பல வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது.

1. தலைக்கு ஊத்தல் எனும் தலைக்கு விளக்கெண்ணெயை நன்கு தேய்த்து குளிர்ந்த நீரில் குளிப்பாட்டி பின் இளநீரை குடிக்கச் செய்தல்.
2. குடும்ப உறுப்பினர்கள் வரிசையாக தொடர்ந்து முதியோரின் வாயில் பால் ஊற்றுதல். (இதனை ஒரு சடங்காக செய்தல்)
3. பூச்சிக் கொல்லி மாத்திரைகள் கொடுத்தல்
4. விஷ ஊசி போடுதல்.
5. கண்காணாத இடத்தில் விட்டுவிட்டு வந்துவிடுதல்.

நன்றி: ***http://ta.wikipedia.org***

இறைவனைப் பற்றியும் அவனுக்கு மனிதன் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளது பற்றியும், மறுமை வாழ்வு பற்றியும் மக்களுக்கு முறையாக போதிக்காததன் விளைவாக இன்று முதியோர் இல்லங்களில் அடைக்கலம் தேடும் போக்கு அதிகரித்து வருகிறது. எந்தக் குழந்தைகளின் நலனுக்காக பெற்றோர் இரவுபகலாக உழைத்து சம்பாதிக்கிறார்களோ, சம்பாதித்ததை சேமிக்கிறார்களோ அதே குழந்தைகள் பருவமடைந்ததும் இவர்களைத் தரக்குறைவாக பேசுவது, நடத்துவது, யாரையேனும் காதலித்து அவர்களோடு ஓடிப்போய் விடுவது, இவர்களது செல்வங்களை ஊதாரித்தனமாக செலவழிப்பது போன்றவை சகஜமாக விட்டன இன்று. முறைப்படி அவர்களை யாருக்கேனும் திருமணம் செய்து வைத்தாலும் வயதான காலத்தில் பெற்றோர்களை ஆதரவற்றவர்களாக விட்டு விடுவது, முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுவது என்பவை எந்த குற்ற உணர்வும் இன்றி பிள்ளைகளால் செய்யப் படுகின்றன. நாளுக்குநாள் மங்கி வரும்

இந்த குற்ற உணர்வு எங்கு இவர்களைக் கொண்டு சென்றிருக்கிறது தெரியுமா? இதோ பெற்றோரின் தன்னலமற்ற சேவைக்கு விருதாக வழங்கப் படுகிறது... கருணைக்கொலை!
நேற்றைய குழந்தைகளே இன்று வாலிபர்களாக நிற்கிறார்கள்!
இன்றைய வாலிபர்களே நாளை முதியோராக மாறுகிறார்கள்!
வாலிப முறுக்கு என்பதும் நம்மைக் கடந்து செல்லும் ஒன்றுதான்
நாமும் முதுமைக்கு மாறுவோம், நம்மையும் பலவீனம் ஆட்கொள்ளும்...
நாமும் தனிமையில் விடப்படுவோம்.......
ஆம், அன்று நம் மீதும் நம் மக்கள் “கருணை” மழை பொழியக் கூடும்!
நாம் விதைத்ததை நாமே அறுவடை செய்யக்கூடும்!

அதற்கு முன் இன்றே விழித்துக் கொள்வோம்!
அனைவர் உள்ளங்களிலும் நல்லொழுக்கம் விதைப்போம்!
முறையான இறையச்சம் விதைப்போம்!
படைத்தவனே இறைவனென்று கலப்படமின்றிக் கற்றுக் கொடுப்போம்!
அவன் நம்மைக் கண்காணிப்பதை உணர்த்துவோம்!
அவனிடமே நம் மீளுதலும் இறுதி விசாரணையும் உண்டென்பதும்
நல்லோர்க்கு சொர்க்கமும் தீயோர்க்கு நரகமும் உண்டென்பதும்
பள்ளிப்பருவத்திலிருந்தே கற்றுக் கொடுப்போம்!

**மேலும், எவரை நாம் வயோதிகமாக்குகிறோமோ, அவருடைய நிலைமையைப் படைப்பில் (பலஹீனமான நிலைக்கு) மாற்றிவிடுகிறோம் அவர்கள் (இதை) அறிந்து கொள்ள வேண்டாமா? (திருக்குர்ஆன் *36:68*)**

# சொர்க்கமும் நரகமும் அவர்களே!

● ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து “இறைவனின் தூதரே! பிள்ளைகள் தமது பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் என்ன?” என்று கேட்டார். அதற்கு நபி “அவ்விருவரும்தான் உமக்கு சுவர்க்கமும் நரகமும் ஆவார்கள்.”என்றார்கள்.

அறிவிப்பவர்: அபூஉமாமா (ரலி) நூல்: இப்னு மாஜா

● ஒருமுறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள், “அவன் இழிவடையட்டும்! அவன் இழிவடையட்டும்! அவன் இழிவடையட்டும்!” என்று கூறினார்கள். மக்கள் வினவினார்கள், “இறைவனின் தூதரே (இழிவடையட்டும் என்றீர்களே) யார்?” “முதுமை பருவத்தில் தன் தாய் தந்தையரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ பெற்றிருந்தும் (அவர்களுக்குப் பணிவிடை புரிந்து) சுவனம் புகாதவன்” என்று பதலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) முஸ்லிம்.

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-


Published from:

**House of Peace,**

PO Box no. 1726,

No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,

Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


## நன்மையில் இணைவீர்..! இறைபொருத்தம் நாடி...!

திருக்குர்ஆன் நற்செய்தி மலர் திருக்குர்ஆன் மற்றும் இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் சத்திய போதனைகளில் அடங்கியுள்ள செய்திகளை தூய தமிழில் அனைத்து தமிழ் கூறும் நல்லுலகும் அறிந்து கொண்டு தங்கள் வாழ்க்கையில் திருத்தங்கள் மேற்கொண்டு இறைவனின் பொருத்ததொடு வாழவேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருவதை அறிவீர்கள். பெரும்பாலான வாசகர்களுக்கு – குறிப்பாக பிறமத அன்பர்களுக்கு –இவ்விதழ் அன்பளிப்பாகவே அனுப்பபட்டு வருகிறது. இந்த சேவையில் இறைபொருத்தம் நாடி தங்களை இணைத்துக் கொள்ள விரும்புவோர் தங்களாலான பொருளாதார உதவியை எங்கள் நிறுவனத்திற்கு செய்யலாம். எங்கள் வங்கிக் கணக்கு விவரம் (Bank Account details):

Name: House of Peace

Bank: ICICI Bank, Indra nagar Branch Bangalore

Account No 016901013432 IFScode: ICIC0000169


Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.

Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/281 73
Regd under Postal Regn. No.KRNA/BGE/1057/2015- 2017
posted at MBC Bangalore GPO on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4
Licenced to post without prepayment License No.WPP-308

(PRINTED MATTER)

To

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................



# அன்னையைப் போலொரு செல்வமுண்டோ?

● ஒரு மனிதர் இறைத்தூதரிடம் வந்து இறைவனின் தூதர் அவர்களே! நான் நல்ல விதமாக நடந்து கொள்ள அனைவரை விடவும் உரிமை பெற்றவர் யார்?" எனக்கேட்டார் அதற்கு நபி அவர்கள் "உம்முடைய தாய்" என்று கூறினார்கள். அதற்கடுத்து யார்? என அம்மனிதர் கேட்டபோது இறைதூதர் அவர்கள் இரண்டாவது முறையும் உம்முடைய தாய் என்று கூறினார்கள். அம்மனிதர் மூன்றாவது முறையாக அதற்கடுத்து யார்? என கேட்ட போது இறைத்தூதர் அவர்கள் உம்முடைய தாய் என்றே பதிலளித்தார்கள். நான்காவது முறை அம்மனிதர் அதற்கடுத்து யார்? எனக் கேட்ட போது உம்முடைய தந்தை என்றும் படிப்படியாக நெருங்கிய உறவினர்களும் என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூற்கள் : புகாரி, முஸ்லிம்